DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No :134/2026**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness - 1 (LW -1)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.சையது இப்ராஹிம் | Caste | : | |
| Father Name | : | திரு. | Calling | : | உணவு பாதுகாப்பு அலுவலர் |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **10.07.2026.**

**PW -1 (LW -1 )**

(எதிரி ஆஜர்.) (சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

நான் தற்போது அந்தநல்லூர் மற்றும் மணிகண்டம் வட்டார உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.12.2024 அன்று முசிறி வட்டார உணவு பாதுகாப்பு அலுவலராக பொறுப்பு வகிக்கும் பொழுது அப்பொழுது உணவு பாதுகாப்பு மாவட்ட நியமன அலுவலர் அவர்களிடம் இருந்து தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் முசிறி பகுதியில் விற்பனை செய்வதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கடந்த 27.12.2024–ம் தேதி அன்று மாலை 08.30 மணியளவில் நானும், என்னுடன் ஆயுதப்படை காவலர் பொன்னரசு என்பவரும் முசிறி பகுதியில் ஆய்வு மேற்கொண்டோம்.

முசிறி தந்தை பெரியார் பாலம் அருகில் உள்ள பாஸ்கர் என்பவருக்கு சொந்தமான முருகன் பேக்கரியில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களான ஹான்ஸ் 20 கிராம் – 60 பாக்கெட்டுகள், விமல்

பான்மசால் 2.6 கிராம் – 70 பாக்கெட்டுகள், V1 Tobacco 0.4 கிராம் – 70 பாக்கெட்டுகள் ஆக மொத்தம் 1410 கிராம் அளவுள்ள தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை பறிமுதல் செய்தோம்.

பாஸ்கர் ஏற்கனவே தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்ற குற்றத்திற்காக அவர் மீது முசிறி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட 1410 கிராம் புகையிலை பொருட்களில் ஹான்ஸ் 600 கிராம் பகுப்பாய்விற்காக எடுத்தது போக மீதம் 810 கிராம் முசிறி காவல் நிலையத்தில் ஒப்படைத்து நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளித்தேன். நான் கொடுத்த புகார் **அ.த.சா.ஆ.1** ஆகும்.

பிரிவு 38 உணவு பாதுகாப்பு மற்றும் தர விதிகள் 2011–ன் கீழ் நான் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.2** ஆகும். நான் கைப்பற்றிய பொருட்களை காவல் நிலையத்தில் ஒப்படைத்து விட்டேன். நான் கைப்பற்றிய பொருட்கள் மனித உபயோகத்திற்கு ஏற்ற பொருட்கள் அல்ல. அவை மனித உடலுக்கு தீங்கு விளைவிக்க கூடியவை. நான் மேற்படி பொருட்களை கைப்பற்றியதற்கு காவலர் பொன்னரசு சாட்சியாக இருந்துள்ளார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எ.த.கு.வி</u>** :

| | |
|---|---|
| **கேள்வி** | வழக்கு சம்பந்தமாக முசிறி பகுதியில் ஆய்வு செய்யும் பொழுது உங்களுடன் ஆயுதப்படை காவலர் பொன்னரசு உடன் இருந்தார் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்கள் ஆய்வு செய்த பகுதியில் எந்த ஒரு பள்ளிகூடமும், கல்வி நிறுவனங்களும் கிடையாது என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | ஆய்வு செய்யும் பொது எதிரிக்கு எழுத்து பூர்வமான அறிவிப்பு கொடுத்தேனா என்றால்? |
| **பதில்** | வாய்மொழி தகவல் கொடுத்தேன். |
| **கேள்வி** | நீங்கள் எதிரிக்கு சோதனைக்கு முன்பு படிவம் 6 கொடுத்தீர்களா? |

LIIADURAI BENCH

| | |
|---|---|
| **பதில்** | கொடுக்கவில்லை. |
| **கேள்வி** | எந்த விதிமுறைக்கு உட்பட்டு கைப்பற்றப்பட்ட சோதனை மாதிரிகள் எடுக்கப்பட்டது என்றால்? |
| **பதில்** | சட்டப்பிரிவு 38. |
| **கேள்வி** | பொருட்கள் விற்றதாக சொல்லகூடிய இடத்தில் அந்த பொருட்களால் உடல் பாதிப்பு ஏற்பட்டது என்று தனிப்புகார் யாரும் கொடுத்தார்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | சம்பவ இடத்திற்கு அருகே சிறுவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டதாக நீங்கள் தெரிந்து கொண்டீர்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | தடை செய்யப்பட்ட பொருட்கள் எங்கிருந்து வாங்கப்பட்டது என்பது பற்றி தெரிந்து கொண்டீர்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | நீங்கள் தடய பொருட்களை சம்பந்தப்பட்ட எல்லையில் உள்ள நீதிமன்றத்தில் ஒப்படைத்தீர்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | அழிக்கப்பட்டதாக சொல்லும் தடய பொருட்கள் சம்பவ இட எல்லைக்குள் அழிக்கப்படவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | தடை செய்யப்பட்ட பொருளை அழிக்க வேண்டும் என்று நீங்கள் எழுத்து பூர்வமாக கொடுத்தீர்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | சம்பவ இடத்திற்கு அருகில் பேக்கரி, டீகடை, பழக்கடை மற்றும் பல கடைகள் இருந்தது என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அங்குள்ளவர்களை இந்த வழக்கில் சாட்சியாக இருக்க அழைப்பு விடுவிக்கவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | புள்ளி விவர கணக்கிற்காக எதிரி கடையில் தடை செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதாக சொல்வதும், அவர் கடையில் இருந்து எந்தவித புகையிலை பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும்? |
| **பதில்** | சரியல்ல. |

| | |
|---|---|
| **கேள்வி** | மாதிரிக்காக எடுக்கப்பட்ட பொருட்கள் எத்தனை நாள் உங்கள் வசம் வைத்திருந்து சோதனைக்கு அனுப்பினீர்கள்? |
| **பதில்** | 1 அல்லது 2 நாட்களுக்கு பிறகு அனுப்பினேன். |
| **கேள்வி** | மாதிரிக்காக எடுக்கப்பட்ட பொருட்கள் யாருடைய பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது என்றால்? |
| **பதில்** | மாவட்ட நியமன அலுவலர் அலுவலகத்தில். |
| **கேள்வி** | நீங்கள் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றாலும், 08.08.2025–ம் தேதி அன்று தான் சோதனைக்காக காலதாமதமாக அனுப்பப்பட்டது என்றால்? |
| **பதில்** | அது காவல் துறையினர் அனுப்பியது. |
| **கேள்வி** | நீங்கள் அனுப்பிய சோதனை அறிக்கை எப்பொழுது அனுப்பப்பட்டது. அது காவலர் விசாரணையின் போது ஒப்படைக்கப்பட்டதா என்றால்? |
| **பதில்** | போலீசார் கேட்கவில்லை அதனால் நான் தரவில்லை. |
| **கேள்வி** | நீங்கள் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் கைப்பற்றிய பொருளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | உங்கள் புகாரில் மாதிரிகள் எடுத்து சீல் வைக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளீர்களா? |
| **பதில்** | இல்லை. |

**மறுவிசாரணை :** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 10.07.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 10.07.2026